பிற்பகல் 1-10

(உ) தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2022), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம், பகுதி-III-ல் 81(B) பிரிவில் சொத்து வரியினை உயர்த்துதல் என்ற தலைப்பில் மன்றமானது தீர்மானத்தின்மூலம் அவ்வப்போது அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள் சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம் என்ற இந்த புதிய உட்பிரிவை புகுத்துகிறது. ஏற்கெனவே சொத்து வரி உயர்வு அமல்படுத்தப்பட்டு, இந்த அரசு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் மீண்டும் ஆண்டுதோறும் சொத்து வரி மற்றும் குடிநீர் வரியினை உயர்த்த வழிவகை செய்யும் இச்சட்டத் திருத்தம் இப்போது தேவையற்றது. தமிழகத்தில் அனைத்துப் பொருட்களின் விலையும் பலமடங்கு உயர்ந்துள்ளதனால், ஏழையெளிய, நடுத்தரக் குடும்பங்கள் அனைத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

@ 9–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்நிலையில் ஆண்டுதோறும் சொத்து வரி மற்றும் குடிநீர் வரி உயர்வினை நிர்ணயம் செய்வதற்கான அதிகாரத்தினை, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கு வழங்குவது என்பது மேலும் தமிழக மக்களைச் சிரமத்திற்குள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இச்சட்டத் திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அடுத்து வரும் சட்டமுன்வடிவின் திருத்தத்தில் பேச வேண்டியதை இப்போது பேசியிருக்கிறார். முதலில் வரும் சட்டத் திருத்தம் ஏற்கெனவே தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு தாமாகவே தாக்கல் செய்த வழக்கொன்றில் (வழக்கு எண் 48/2020) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், சென்னை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றிற்கும் சில வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது. (குறுக்கீடு) முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் இதனைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் அடுத்த சட்ட திருத்தத்திற்காகப் பேசியிருக்கிறீர்கள். இப்போது கழிவுநீரகற்றல். ஒவ்வோர் இடத்திலிருந்தும் கழிவுநீரை எடுத்துக்கொண்டு சென்று, ஏரிக் கரைமீது மற்றும் கண்ட இடங்களிலெல்லாம் கொட்டி விடுகிறார்கள். அதனைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தமாகும். அவ்வாறு கழிவுநீரை எடுத்துச் செல்லும் வண்டிக்கு license தருவது, GPS பொருத்தி எந்த வழியாகச் செல்ல வேண்டும், எந்த இடத்தில் கொட்ட வேண்டுமென்று சொல்வதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம். அதிலிருந்து அவர்கள் மாறுபடுவார்களேயானால், முதல் முறை அவர்களுக்கு 20,000 ரூபாய் அபராதமும், இரண்டாவது முறை 50,000 ரூபாய் அபராதமும், மூன்றாம் முறை வண்டியினுடைய license-ஐயே எடுக்கும் விதமாகவும் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம். கழிவுநீரைக் கொண்டு போய் கொட்டுகிற இடம்; அதாவது கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் இடத்தில் கொண்டு போய்க் கொட்ட வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டதே தவிர, அது வேறொன்றுமில்லை. எனவே, முறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, அடுத்த சட்டமுன்வடிவில் இதனைப் பதிவு செய்து கொள்கிறேன். எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் நிறைவேற்றி கொடுத்துவிடுங்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2022), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 9–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.